
# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்! ஆங்கில நாளேடுகள் படப்பிடிப்பு!





# தருமபுரி மேற்கு மாவட்ட கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – முனைவர் பி.பழனியப்பன் அறிவிப்பு!

தருமபுரி,அக்.30-

தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - முனைவர். பி.பழனியப்பன் அறிக்கை வருமாறு:



கழகத்தலைவர் - முதலமைச்சர் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாளை (31.10.2025-வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணியளவில் காரிமங்கள் கழக அலுவலகத்தில் மாவட்ட கழக அவைத்தலை கே. மனோகரன் தலைமையில் நடைபெறும். அதுசமயயம் நாடாளுமன்ற உறுப்பினர். முன்னாளௌள சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாங்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய செயலாளர்கள். பேரூர்க்கழகச் செயலாளர்கள் தேர்தல் பணிக்கு ஒருங்கிணைப்பாளர்கள் ,மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள், மற்றும் கழக வழக்கறிஞர்கள் அனைனரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:**

1.கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 28.10.2025 அன்று மாமல்லபுரத்தில் நடைபெற்ற “உன் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பயிற்சிக் கூட்டத்தில் வழங்கிய ஆலோசனைகள் குறித்தும்.

2. *Special Intensive Revision (SIR)* எனப்படும் சிறப்புத் திருத்ததை 04.11.2025 அன்று முதல் நடைமுறைபடுத்துவது குறித்தும்.

3. கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச் அவர்களின் பிறந்த நாள் விழாவினை “எளியோரின் எழுச்சி” நாளாக கொண்டாடு குறித்தும்

இவ்வாறு முனைவர். பி.பழனியப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்ட முன்னாள் அவைத்தலைவர்

# மு.சிவசபாபதியின் மகன் சிவ.செந்தில்குமார் மறைவு!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் – என்.கயல்விழி செல்வராஜ் மற்றும் அந்தியூர் செல்வராஜ் – கே.இ.பிரகாஷ் – கே.ஈஸ்வரசாமி அஞ்சலி!

திருப்பூர், அக்.30-

திருப்பூர் மாவட்ட முன்னாள் அவைத்தலைவர் மு.சிவசபாபதி அவர்களின் மகன், குண்டடம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் சிவ. செந்தில்குமார் (வயது 61) இவர் காங்கேயத்தில் உள்ள அவரது இல்லத்தில் 26.10.2025 ஞாயிற்றுக் கிழமை அன்று மதியம் 3.00 மணியளவில் மாரடைப்பால் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், கழக துணைப் பொதுச் செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிரஷ்ணன், காங்கேயம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ராஜ்குமார் மன்றாடியார், விடியல் சேகர், உ.தனியரசு, மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர். முத்துக்குமார், பொருளாளர் கே.எம்.முபாரக் அலி,

தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.எஸ்.கருணாகரன், கார்த்திகேயன், ஒன்றிய கழக செயலாளர்கள் சு.சந்திரசேகரன் (குண்டடம் மேற்கு), ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் எஸ்.வி.செந்தில்குமார் (தாராபுரம் மேற்கு) கே.சந்திரசேகரன் வெள்ளக்கோவில், கே.கே.சிவானந்தன் (காங்கேயம் தெற்கு), சி. கருணை பிரகாஷ் (காங்கேயம் வடக்கு), எஸ்.ஆர்.எஸ். செல்வம் (சென்னிமலை மேற்கு) சி.பிரபு (சென்னிமலை கிழக்கு) நகர கழக செயலாளர்கள் வசந்தம் நா.சேமலையப்பன் காங்கேயம், சபரி எஸ். முருகானந்தம் வெள்ளக் கோவில், *poriyaalar* எஸ். முருகானந்தம் தாராபுரம், பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் எம்.எஸ். மோகன செல்வம், முத்தூர் பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு,

குண்டடம் கிழக்கு ஒன்றிய அவைத்தலைவர் ராசு (எ) கிருஷ்ணசாமி, துணை செயலாளர்கள் கோபாலகிருஷ்ணன், மதிவாணன், சரஸ்வதி பெரியசாமி, பொருளாளர் நல்லசாமி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் செந்தில்குமார், மாவட்ட விவசாய அணி தலைவர் ஈஸ்வரன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் மயில்சாமி, மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிப் பேரவை துணை அமைப்பாளர் சென்னிமலை சேகர் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக, வட்டக் கழக, வார்டு கழக, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்பட பொது மக்கள் பலர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த குண்டடம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் சிவ.செந்தில்குமாருக்கு செ.தமிழரசி என்ற மனைவியும் (ஆறுதொழுவு ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்) செ.தீபிகா, செ.சிந்து மஞ்சலி என்ற இரு மகள்கள் உள்ளனர். இருவருக்கும் திருமணமாகி விட்டது.

அவரது உடல் 27.10.2025 திங்கட்கிழமை அன்று மதியம் 12.30 மணியளவில் ஆறுதொழுவில் உள்ள அவரது தோட்டத்தில் தகனம் செய்யப்பட்டது. இறுதிச் சடங்கில் கழகத்தின் இன்னாள், முன்னாள் நிர்வாகிகள் கழக உடன் பிறப்புகள், உற்றார், உறவினர்கள், பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

ஆசிய இளையோர் மகளிர் கபடி போட்டி:

# தங்கம் வென்ற செல்வி கார்த்திகாவுக்கு சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.5 இலட்சம்!

## மேயர் திருமதி ஆர்.பிரியா காசோலை வழங்கிப் பாராட்டினார்!

சென்னை, அக்.30-

பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் மகளிர் கபடி போட்டியில் தங்கம் வென்று சாதனை படைத்த இந்திய மகளிர் அணியின் துணை கேப்டனும், பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்த திருமதி சரண்யா அவர்களின் மகளுமான செல்வி கார்த்திகா அவர்களைப் பாராட்டி, மாநகராட்சியின் சார்பில் ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று முன்தினம் (28.10.2025) வழங்கிப் பாராட்டினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகி அரசுப்பள்ளியில் 12ஆம் வகுப்பு பயின்று வரும் கண்ணகி நகரைச் சேர்ந்த செல்வி கார்த்திகா (வயது 17), பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் மகளிர் கபடி விளை யாட்டுப் போட்டியில் இந்திய மகளிர் கபடி அணி இறுதிப்போட்டியில் ஈரானை 7521 என்ற புள்ளிக்கணக்கில் வென்று தங்கம் பெற்று சாதனை படைத்தது. இந்திய அணியின் துணை கேப்டனாக இருந்து அணி தங்கம் வெல்ல முக்கிய காரணமாக இருந்து உலக அரங்கில் இந்திய நாட்டிற்குப் பெருமை சேர்த்த நமது சென்னையின் கண்ணகி நகரைச் சேர்ந்த செல்வி கார்த்திகா ஆவார். இவரின் அபார ஆட்டத்தால் ஆசிய இளையோர் விளை யாட்டுப் போட்டியில் இந்திய மகளிர் கபடி அணி தங்கம் வென்றுள்ளது.

செல்வி கார்த்திகாவின் தாயார் சரண்யா சென்னை மாநகராட்சியின் கோடம்பாக்கம் மண்டலத்தில் 29.10.2020 முதல் 01.01.2024 வரை தூய்மைப் பணியில் பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வாகனத்தின் ஓட்டுநராகப் பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பிறகு சொந்தமாக ஆட்டோ வாங்கி தற்போது ஆட்டோ ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறார். செல்வி கார்த்திகாவின் இந்த வளர்ச்சிக்கு அவர்களின் குடும்பத்தினரின் பங்கு அளப்பரியது என்றும் குறிப்பிட்டார்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2, 17 வது வார்டு சார்பாக வார்டு சபா சிறப்பு கூட்டம், மண்டல தலைவரும் வார்டு மாமன்ற உறுப்பினருமான இ. ஜோசப் அண்ணாதுரை தலைமையில் மாநகராட்சி உதவி ஆணையர் திருமதி சொர்ணலதா முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வார்டில் உள்ள பொதுமக்கள், நல்வாழ்வு சங்க நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு வார்டில் நடைபெற வேண்டிய பணிகள் குறித்து கோரிக்கை மனுக்கள் வழங்கினார்கள். பொதுமக்கள் வழங்கிய கோரிக்கை மனுக்கள் மீது, விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என மண்டலத் தலைவர் நன்றி கூறி சிறப்புரை ஆற்றினார். மாநகராட்சி அதிகாரிகள், கழக நிர்வாகிகள் மாநகராட்சி ஊழியர்கள். என ஏராளமானோர் திரண்டு இருந்தனர்.